[1991 அக்டோபர் 3

(அ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஊராட்சி ஒன்றியம், வாழ்க்கை கிராமத்தில் ஒரு கிளை நூலகம் துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), மற்றும் (ஆ): தமிழ்நாடு பொது நூலகச் சட்டத்தின்படி, 5,000 மக்கட்தொகைக்கு மேல் உள்ள கிராமங்களில் தான் கிளை நூலகங்கள் திறக்க இயலும். வாழ்க்கை என்ற இந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் தொகை 5,000-க்கும் குறைவாகும். இங்கு கிளை நூலகம் திறக்க இயலாது. எனவே அதற்குப் பதிலாக ஒரு பகுதி நேர நூலகம் 14—7—1991 முதல் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்ட மன்ற உறுப்பினரான உடனேயே இந்தக் கேள்வியைப் போட்டேன். கிளை நூலகம் அனுமதிக்கப்பட்டு, அந்த நூலகத்தை நானே திறந்து வைத்திருக்கிறேன். அதற்கு கல்வி அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் பாராட்டை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 138.

திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு கல்வியமைச்சர்.

பெண்ணாடம் நகரில் தொழில் நுட்பக் கல்லூரி.

138—

*1289— திரு. ச. புரட்சிமணி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் பெண்ணாடம் நகரில் தொழில் நுட்பக் கல்லூரி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

தற்போது இல்லை,

1991 அக்டோபர் 3]

திரு. ச. புரட்சிமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தற்போது இல்லை என்று கூறியுள்ளார்கள். எனது மங்களூர் தொகுதி மூன்று ஒன்றியங்களைக் கொண்ட மிகப் பெரிய தொகுதியாகும். மிகப் பெரிய தொகுதியான இந்தத் தொகுதி வறட்சியான தொகுதியாகும். எனது தொகுதியிலே இதுவரை எந்த தொழில்நுட்பக் கல்லூரியோ, கலைக் கல்லூரிகளோ இல்லை. ஆதலால் எனது தொகுதியில் ஒரு தொழில்நுட்பக் கல்லூரியைத் தொடங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது தொழில் பயிலகங்கள் அரசு தரப்பிலே 24-ம் அரசின் உதவிபெறுகிற தனியார் பொறுப்பிலே 34-ம் சுய நிதியில் அரசினுடைய நிதியையே பெறாமல் தனியார் நடத்துகின்ற அமைப்புகள் 73-ம் ஆக 131 தொழில்நுட்பப் பயிலகங்கள் இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இந்தத் தொகுதியை ஒட்டி சிதம்பரத்தில், விழுப்புரத்தில், பண்ருட்டியில் பல்வேறு தொழில் நுட்ப பயிலகங்கள் நடைபெற்று வருகின்றன. குறிப்பாக நம்முடைய மாண்புமிகு புரட்சி தலைவர் அவர்கள் ஆட்சியிலே தான் நம்முடைய மாணவர்களுக்கு தொழில் நுட்ப பயிற்சியிலே அதிக வாய்ப்புகளும் கல்வியும் வழங்க வேண்டும் என்ற உள்ளத்தோடு தனியார் துறையிலே இந்தத் தொழில் நுட்ப பயிலகங்கள் கல்லூரிகள் தொடங்க வேண்டும் என்ற திட்டத்தை அறிவித்து இப்போது மிகப் பெரிய வளர்ச்சியை தமிழகம் இந்தத் துறையிலே பெற்றிருக்கிறது. அப்படி தொடங்கிய காலத்தில் இதன்மீது சில குற்றங்குறைகளை குறித்து சில குறைபாடுகளை பொதுமக்களிடத்திலேயிருந்து எழுந்ததை ஒட்டி, டாக்டர் வி. சி. குழந்தைசாமி, அவர்கள் தலைமையிலே இந்த தேவைகளைப் பற்றி பரிசீலிக்கவும் இதிலே செய்ய வேண்டிய சீர்த்திருத்தத்தைப் பற்றி ஆய்ந்து அறிவுரை கூறவும் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு எல்லா நலன்களையும் ஆராய்ந்தது. 7-வது ஐந்தாவது திட்டக் காலத்திற்குள் 1991 ஆம் ஆண்டு வரை தமிழகத்தில் இப்போதுள்ள தொழில் நுட்ப பயிலகங்கள் கல்லூரிகள் போதும். அது பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டுமானால் 8-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் 1992-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கி பரிசீலித்து எங்கே தேவையோ அங்கே வழங்கலாம் என்று பரிந்துரைகளை செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரைகளை ஒட்டித்தான்

முற்பகல் 9.55

இன்றைக்கு நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் இந்த ஆண்டு தொழில் நுட்ப பயிலகங்கள் அல்லது தொழில் நுட்ப கல்லூரிகள் உடனடியாக வழங்க வேண்டாம் என்று முடிவு எடுத்து அடுத்த ஆண்டு பரிசீலித்து, எந்தப் பகுதியில் எது தேவையோ அதை ஆராய்ந்து தன்னுடைய நிதிநிலைக்கு ஏற்ப அரசு தொடங்க முடியுமா இல்லையானால் வசதி உள்ள நல்ல நிர்வாக திறன் மிக்க வியாபார நோக்கம் இல்லாமல் நல்ல உணர்வோடு சமுதாயத்திற்கு சேவை செய்கிறோம் என்ற உணர்வோடு அமைப்புகள் வருமேயானால் அப்படிப் பட்ட தனியாருக்கு வழங்கலாம் என்பதை பரிசீலிக்கலாம் என்று ஆணை இட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 139. திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் ஊழியர்களை நிரந்தரம் செய்தல்.

139—

* 1187—**திரு. கே. ஏ. மனோகரன்** :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கூட்டுறவு நியாயவிலைக் கடைகளில் தினக் கூலி அடிப்படையில் பல ஆண்டுகளாகப் பணிபுரியும் அனைத்து ஊழியர்களையும் நிரந்தரம் செய்ய அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கே. ஏ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாம் நடக்கும் இந்தப் புரட்சித் தலைவியின் ஆட்சியிலே தினக் கூலி அடிப்படையில் வேலை செய்கின்ற நபர்கள் இருக்கிற காரணத்தாலே ஊழல்கள் நிறைய ஏற்படுகிறது. நிறைய புகார்கள் வருகின்றன. ஆகவே அதை களையும் வண்ணம் அரசு மறு பரிசீலனை செய்து இதை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.